CENTRE FOR TESTING & EVALUATION

National Testing Service - India

Central Institute of Indian Languages

# இந்திய தேசியத் தேர்வுப்பணி

## இந்திய மொழிகளின் பன்னோக்கு மதிப்பீட்டு முறைமம்

# வினா உரு உள்ளீடு குறித்த பயனர் நெறிமுறை கையேடு

## இந்திய தேசியத் தேர்வுப்பணி

(இந்திய கல்வி அமைச்சகத்தின் நடுவண் திட்டம், உயர்கல்வித் துறை, இந்திய அரசு.)

தலைமையகம்: இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,

மைசூரு-570006

கர்நாடகம்.

# அறிமுகம்

**வினா உருக்கோப்பு அட்டைக் குறித்து**

வினா உருக்கோப்பு அட்டை என்பது வினா உருக்களை எழுதுவதற்கும் சேமிப்பதற்கும் உருவாக்கப்பட்ட படிவம் ஆகும். இந்தக் கோப்பு அட்டை பல்வேறு தொழில்நுட்ப மதிப்புக்களை (technical values) உள்ளடக்கி 10 நிரைகளோடு (column) கூடிய, A4 காகித அளவில் (specific size A4) உருவாக்கப்பட்டுள்ளது.

**பத்து பண்பளவைகளாவன:**

1. தேர்வு நடத்துவதற்கான குறிப்புகள்
2. தேர்வருக்குரிய குறிப்புகள்
3. வினா/வினா உரு (விடைத்திறவி/குறிப்புகளுடன்)
4. அளவையிடல் செயல்
5. பாடப்பொருள் உள்ளீடு -துணைக்கூறு
6. நோக்கம் (கற்பித்தல்/கல்வி/சமூதாயம்)
7. உரு வகை/வடிவம்
8. நிலை & அளிக்கும் முறை
9. கற்றல் நிலை
10. பொருந்துதன்மை

**செயலி குறித்து (About Application)**

இந்த இணையச் செயலி (web application) பயனர்களுக்கு இணையத் தளத்திலேயே வினா உருக்களை உள்ளீடு செய்வதற்கு உதவுகிறது. உள்ளீடு செய்யப்படும் வினா உருக்கள் தாமே தானியங்கி முறையில் MILES (Multipurpose Indian Language Evaluation System-இந்திய மொழிகளின் பன்நோக்கு மதிப்பீட்டு முறைமம்) எனும் தரவகத்தில் சேகரமாகின்றன.

**இம்முறைமத்தில் செயல்படத் தேவையானவைகள் (System Requirements)**

- கணினி/மடிக்கணினியின் குறைந்தபட்ச தேவைகள் (Core 2 duo processor with 2 GB RAM OS windows XP, 7 & above etc)
- Google Chrome, Mozilla Firefox, Internet Explorer போன்ற உலாவிகள் (browsers) கொண்ட ஒருங்குகுறி (Unicode) இயங்கும் தன்மையுடைய கணினி/மடிக்கணினி. அண்மையில் மேம்படுத்தப்பட்ட (latest version) உலாவிகள் பரிந்துரைக்கப் படுகிறது.
- உங்களின் கணிப்பொறியில் ஒருங்குகுறியை எவ்வாறு இயங்கச் செய்ய வேண்டும் என தெரிந்து கொள்ள கீழே உள்ள இணைப்பைச்(link) சொடுக்கி காணவும். https://www.youtube.com/watch?v=gVxYDuVvK0A&ab_channel=ShareefAdmire
- Google Input Tool-ல் தமிழ் தட்டச்சு செய்வது குறித்து அறிந்து கொள்ள கீழே உள்ள இணைப்பைச் சொடுக்கி காணவும். https://www.youtube.com/watch?v=_akdJL6gBp0
- எங்களின் இணைய அடிப்படையிலான வினா உரு உள்ளீட்டு செயலி ஒருங்கு குறியில் மட்டுமே இயங்கும். எனவே **Latha** (லதா) எழுத்துருவையே நாங்கள் பரிந்துரைக்கிறோம். தங்களின் இயங்குதள அமைப்பில்(operating system) **Latha** எழுத்துரு இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

## உள் நுழைவுத்திரை (LOGIN SCREEN)

படிநிலை 1: உலாவியைத் திறக்கவும்.

படிநிலை 2: உலாவியின் முகவரிப் பட்டையில் (address bar) கொடுக்கப்பட்ட இணைப்பை www.ciil-ntsindia.net/Tamil ஒட்டவும்.





**படிநிலை:3** உங்களின் பயனர்பெயரை (user name) பதிவு செய்யவும்.

**படிநிலை:4** கடவுச்சொல்லைப் (pass word) பதிவிடவும்.

**படிநிலை:5** உள் நுழைவு (login) பொத்தனை அழுத்தவும் .

## வினா உருகோப்பு அட்டவணையின் பண்பளவைகள் (IFC PARAMETERS)


### 1.பொதுமைக் கூறுகளின் பட்டியல் குறியீடு மற்றும் கூறுகள் (GFR Code and Aspect)




**படிநிலை:**6 பொதுமைக் கூறுகளின் பட்டியல் குறியீடு எண்ணை இடவும் அல்லது கூறுக்கான எண்ணைத் தேர்ந்தெடுக்க தங்களின் வினா உருவானது மொழிக்குறித்தா இலக்கியம் குறித்ததா, ஆளுமைப்பண்பு குறித்ததா என உள்நுழைந்து தேர்ந்தெடுக்கவும்.

**படிநிலை:7** அடுத்து (next) பொத்தானை அழுத்தவும்.

## 2. பரிமாணங்கள்(Dimensional Problem)




படிநிலை:8 நீங்கள் தேர்ந்தெடுத்த கூறுக்கு ஏற்ப (மொழி/இலக்கியம்/ ஆளுமை) தொடர்புடைய பரிமாணங்கள் தானாகவே கீழ்விரியாகக் (dropdown) காட்சியாகும்.

## 3.தேர்வு நடத்துவதற்கான குறிப்புகள் மற்றும் அறிவுரைகள் (Administering Details and Instruction)




படிநிலை:9 தேர்வு நடத்துவதற்கான குறிப்புகளைப் பதிவிடவும்.

படிநிலை:10 தேர்வருக்கான நெறியுரைகளைப் பதிவிடவும்.

தொடர்ந்து ‘அடுத்து’ பொத்தானை அழுத்தவும்.

## 4. வினா உரு (Question Item)



Select the ItemFormat

Matching (Mg.) - பொருத்து (வினா)

Question/Item stem: B I U

கீழே கொடுக்கப்பட்டுள்ள செயலுக்கேற்ற மாத்திரை அளவினைப் பொருத்துக

| # | Column A | # | Column B |
|---|---|---|---|
| 1 | சிட்டிகை போட வேண்( | I | இரண்டு மாத்திரை |
| 2 | நடுவிரலையும் கட்டை | II | கால் மாத்திரை |
| 3 | இரண்டு விரல்களையு | III | ஒரு மாத்திரை |
| 4 | சிட்டிகை போட்டு விரல | IV | அரை மாத்திரை |
| 5 | | V | முக்கால் மாத்திரை |
| 6 | | VI | |

Options:

1. 1 - II , 2 - I, 3 - IV, 4 - III
2. 1 - II , 2 - I, 3 - III, 4 - V
3. 1 - II , 2 - IV, 3 - V, 4 - III
4. 1 - II , 2 - I, 3 - V, 4 - III

Please enter Fifth Option

Please enter Sixth Option

Answer Key/Cue:

1 - II , 2 - IV, 3 - V, 4 - III

Marks:

4

Time: (In Minutes)

4

Scoring Procedure:

Enumerative

Lg./Literary (Input) sub component: Contents & Themes - உள்ளடக்கமும் கருவும்

Objective (Question writers's intention):


இலக்கணம் புரிதல் திறனை சோதித்தல்

Next

**படிநிலை:11** கீழ்க்கண்ட தகவல்களை வினா உருவிற்கு ஏற்ப பதிவிடவும்

1. வினா உரு வடிவத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
2. கொடுக்கப்பட்ட உரைப்பெட்டியில் (text box) வினாவைப் பதிவிடவும்.
3. ஏதேனும் தெரிவுகள் இருப்பின் தரவும்.
4. விடைத்திறவைப் (answer key) பதிவிடவும்.
5. மதிப்பெண்ணைக் கொடுக்கவும் (எண்ணில் மட்டும்)
6. தேவைப்படும் நேரத்தை நிமிடத்தில் தரவும் (எண்ணில் மட்டும்)
7. நீங்கள் தேர்வு செய்திருக்கும் துணைமைக்கூறுகள் ஏற்கனவே காட்சியாகி இருக்கும் .
8. அக்குறிப்பிட்ட வினா உருவிற்கு உரிய நோக்கத்தைப் பதிவிடவும்
9. அடுத்து பொத்தானை அழுத்தவும்.
10. அளவையிடல் முறையைத் தேர்ந்தெடுக்கவும்.

## 5. வினா உரு வடிவம் (Item Format)




படிநிலை **12:** பின்வரும் திரையில் தகவல்களைப் பதிவிடவும்

1. நுண்தேர்வு அளிக்கும் முறையைத் தேர்ந்தெடுக்கவும். (இதைப் பொறுத்தவரை எழுதுதலைத் தேர்ந்தெடுக்கவும்)
2. கற்றல் நிலையைத் தேர்ந்தெடுக்கவும்.
3. பொருந்துதன்மையைப் பதிவிடவும்.
4. தெரிவுக்குறியீடு (Choice Index) தானாகவே காட்சியாக்கப்படும்.
5. செயலெளிமை மதிப்பு(Feasibility value) தானாகவே காட்சியாக்கப்படும்.
6. பிரித்தறி மதிப்பு (Discrimination value) தானாகவே காட்சியாக்கப்படும்.
7. கூட்டுச்சராசரி இயலுமைக் குறியீடு (Mean Ability Index) தானாகவே காட்சியாக்கப்படும்.
8. முன்-ஏற்புமையாக்கத்தின் அளவு (Level of Pre-Validation ) தானாகவே காட்சியாக்கப்படும்
9. சமர்ப்பித்தல்(submit) பொத்தானை அழுத்தவும்.

**வினா உரு வெற்றிகரமாக சேர்க்கப்படும் (Question Item will be added successfully)**

| **படிநிலை:**13 பயனர் தங்கள் கணக்கு விவரத்தை அறிய Welcome (Username) பொத்தானை அழுத்திக் காணலாம். | **படிநிலை:**14 கணக்கு விவரத்தைப் பார்த்தல் (View Profile) பொத்தானை அழுத்தவும். |
|---|---|
|   |   |

**படிநிலை 15** செய்யப்பட்ட இடுபணிகளின்**(tasks)** ஒட்டுமொத்த காட்சி (Overview) காட்சியாக்கப்படும்.

வினா உரு உள்ளீட்டை நிறைவு செய்த பிறகு வெறியேறு **(Sign Out)** பொத்தானை அழுத்தி வெளியேறவும்.

